பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
02 08 2024 6 45
வெள்ளிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- மாநில ஆளுநர்களின் 2 நாள் மாநாடு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தலைமையில் புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.
- **SC, ST** பிரிவுகளில் உள்ஒதுக்கீடு வழங்குவதற்கு மாநில அரசுகளுக்கு அதிகாரம் உள்ளதாக உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்று மத்தியஇணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.
- தமிழக அரசு செயல்படுத்தி வரும் மக்கள் நலத்திட்டங்களால் மாணவர்களும், இளைஞர்களும் பயன்பெற்றிருப்பதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.
- கேரளாவில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட வயநாடு மற்றும் இதர பகுதிகளில் மீட்புப் பணிகள் தொடர்ந்து முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.
- பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் ஹாக்கி பிரிவில், இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

மாநில ஆளுநர்களின் 2 நாள் மாநாடு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தலைமையில் புதுதில்லியில் உள்ள குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று தொடங்குகிறது.

இம்மாநாட்டில் அனைத்து மாநில ஆளுநர்கள், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் ஆகியோர் பங்கேற் உள்ளனர்.

அத்துடன் வேளாண் மற்றும் விவசாயிகள் நலன், கல்வி, பழங்குடியினர் நலன், தகவல் மற்றும் ஒலிபரப்பு, சுற்றுச்சூழல், வனம், பருவநிலை மாற்றம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்கள், நிதி ஆயோக்கின் தலைமைச் செயல் அதிகாரி உள்ளிட்டோரும் பங்கேற்க உள்ளனர்.

மூன்று குற்றவியல் சட்டங்களை அமல்படுத்துதல், உயர்கல்வி சீர்திருத்தங்கள் உள்ளிட்டவை குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது.

<<<<>>>>

ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியினர் பிரிவுகளில் உள்ஒதுக்கீடு வழங்குவதற்கு மாநில அரசுகளுக்கு அதிகாரம் உண்டு என்று உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்று மத்திய தகவல் ஒலிபரப்பு இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதன் மூலம் தமிழகத்தில் அருந்ததியர் சமூகத்திற்கான 3 சதவீத உள்ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதேபோல் ஆந்திரா, தெலங்கானா மாநிலங்களில் உள்ள ‘மதிகா’ சமூகத்தினரும் பயனடைவார்கள் என்று அவர் கூறியுள்ளார்.

உள்ஒதுக்கீடு வழங்குவதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்ததையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்காக பிரதமருக்கு தாம் நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் திரு. எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

நாட்டில் கல்வித்துறைக்கான பட்ஜெட் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நேற்று தமது துறைக்கான மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது பதிலளித்துப் பேசிய அவர், தரமான கல்வியின் மூலம் மட்டுமே 2047ஆம் ஆண்டுக்குள் 30 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை நாடு அடைய முடியும் என்பதால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் உயர்கல்விக்கான பட்ஜெட் ஒதுக்கீடு 78 சதவீதம் அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

தற்போது 9 லட்சத்து 19 கோடி ரூபாய் கல்வித்துறைக்காக செலவிடப்படுகிறது என்று அவர் தெரிவித்தார்.

உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

பழங்குடியின மாணவர்களின் கல்விக்காக அரசு உறுதிகொண்டுள்ளது என்றும், அவர்களின் வசதிக்காக 500 விடுதிகள் கட்டப்படும் என்றும் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

<<<<>>>>

இளநிலை மருத்துவப் படிப்புக்கான நீட் வினாத்தாள் கசிவு தொடர்பான வழக்கில் பீஹாரில் 13 பேர் மீது சிபிஐ முதலாவது குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளது.

இதற்கிடையே மற்ற குற்றவாளிகள் மற்றும் சந்தேகத்திற்கு உரியவர்களிடம் தொடர்ந்து புலனாய்வு விசாரணை மேற்கொள்ளப்படுவதாக சிபிஐ கூறியுள்ளது.

நீட் வினாத்தாள் கசிவு தொடர்பாக இதுவரை 58 இடங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டு 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

தேர்வுக்கு முந்தைய நாள் ஜார்கண்ட் மாநிலம் ஹசாரிபாக் தேர்வு மையத்தில் இருந்து வினாத்தாள் முன்கூட்டியே வெளியானது கண்டறியப்பட்டதாகவும் சிபிஐ தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் மாநில அரசின் சார்பில் வல்வில் ஓரி விழா இன்று தொடங்கி இரண்டு நாட்கள் நடைபெறுகிறது.

கொல்லிமலைப் பகுதியில் சங்ககாலத்தில் புகழ்பெற்ற கடையெழு வள்ளல்களில் ஒருவராகத் திகழ்ந்த வல்வில் ஓரி மன்னரின் வீரத்தையும், கொடைத்தன்மையையும் போற்றும் வகையில் ஆண்டுதோறும் ஆடி மாதம் 17, 18 ஆகிய நாட்களில் அரசு சார்பில் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

இவ்விழாவில் மலர்க் கண்காட்சி, அரசுத்துறைகளின் பணிவிளக்க முகாம், சுற்றுலா விழா ஆகியவை நடைபெற உள்ளன.

இவ்விழாவையொட்டி நாமக்கல் மாவட்டத்திற்கு நாளை உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தானியங்கள் பற்றாக்குறை உள்ள மாநிலங்கள் மின்னணு ஏலத்தில் பங்கேற்காமல், திறந்தவெளி சந்தை விற்பனை திட்டத்தின்கீழ் இந்திய உணவுக் கழகத்திடம் இருந்து நேரடியாக கொள்முதல் செய்யலாம் என்று மத்திய உணவுத்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

அதன்படி குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 2 ஆயிரத்து 800 என்ற விலையில் மத்திய அரசின் உணவு மற்றும் பொதுவினியோகத்துறை, மாநிலங்களுக்கு நேரடியாக வழங்கும் என்று கூறியுள்ளார்.

பருப்பு வகைகளின் சாகுபடி அதிகரித்துள்ளதாகவும், விவசாயிகளிடம் இருந்து 100 சதவீதம் கொள்முதல் செய்யப்படும் என்றும் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<>>>>

மேட்டூர் அணையில் இருந்து காவிரி ஆற்றில் உபரிநீர் திறக்கப்பட்டுள்ளதால் நாமக்கல் மாவட்டத்தில் காவிரி கரையோரப் பகுதிகள் மற்றும் தாழ்வான பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளது.

இதையடுத்து அங்கு வசிக்கும் பொதுமக்கள் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரி ஆற்றுக்கு இன்று காலை மணி 5.30 நிலவரப்படி நீர்வரத்து வினாடிக்கு ஒரு லட்சத்து 70 ஆயிரம் கன அடியாக இருந்தது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

கேரளாவில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட வயநாடு மற்றும் இதர பகுதிகளில் மீட்புப் பணிகள் தொடர்ந்து முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

7 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் 70 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே சூரல்மலை - முண்டக்கை இடையே ராணுவத்தினர் அமைத்த தற்காலிக பாலம் போக்குவரத்திற்காக நேற்று திறக்கப்பட்டது.

மீட்புப் பணிகளில் ஈடுபட இன்று முதல் அந்த பாலம் பயன்படுத்தப்பட உள்ளது.

இந்நிலையில் முண்டக்கை பகுதியில் கனமழை பெய்ததை அடுத்து நேற்று பிற்பகல் அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன.

இன்று அப்பணிகள் தொடர்ந்து நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழக அரசு செயல்படுத்தி வரும் மக்கள் நலத்திட்டங்களால் மாணவர்களும், இளைஞர்களும் பயன்பெற்றிருப்பதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், தமிழக அரசின் சார்பில் அனைத்து தரப்பினருக்கும் உதவும் வகையில் முன்னேற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டினார்.

கல்வியின் முக்கியத்துவத்தை அதிகரிக்கும் வகையில் அரசு செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

*__இருவரிச் செய்திகள்__*

புலம்பெயர்ந்தவர்களுக்காக அண்டை நாடான அல்பேனியாவில் இரண்டு நிவாரண முகாம்களை இத்தாலி திறந்துள்ளது.

<<<<>>>>

மாநில ஆளுநர்களின் 2 நாள் மாநாடு குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று தொடங்குகிறது.

<<<<>>>>

கனமழை காரணமாக கேதார்நாத் யாத்திரை 2 நாட்களுக்கு ரத்து செய்யப்படுவதாக உத்தராகண்ட் மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சுதந்திர தின கொண்டாட்டத்தை ஒட்டி தில்லியில் பாராகிளைடர், ட்ரோன் உள்ளிட்டவற்றை பறக்க செய்யவதற்கு இன்று முதல் 16ஆம் தேதி வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரியில் இருந்து கீழ்மொரசுப்பட்டி, வேப்பனஹள்ளி, கனமனப்பள்ளி, லிங்கம்பட்டி உள்ளிட்ட வழித்தடங்களில் 3 அரசுப் பேருந்துகள் சேவையை மாநில அமைச்சர் திரு. சக்கரபாணி தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

திருவண்ணாமலை மாவட்டத்தில் அரசுப் பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்த தலைமை ஆசிரியர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு. எ.வ. வேலு அறிவுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

மண்சரிவு சீரமைப்பு பணிகள் காரணமாக மேட்டுப்பாளையும் – உதகை இடையே இயக்கப்படும் மலைரயில் போக்குவரத்து இன்றும், நாளையும் ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டத்தில் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனை குறித்த மாதாந்திர ஆய்வுக் கூட்டம் ஆட்சியர் டாக்டர் பிரபுசங்கர் தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்ட சுகாதார அலுவலர் அலுவலகத்தில் மாவட்ட கண்காணிப்பு அறையை ஆட்சியர் திரு. தர்ப்பகராஜ் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

தருமபுரி மாவட்டத்தில் நடைபெறும் பழங்குடியின மக்களின் சமூக பொருளாதார கணக்கெடுப்பில் அனைத்து விவரங்களையும் சரியாக அளித்து ஒத்துழைக்குமாறு ஆட்சியர் திருமதி சாந்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் பேட்மிட்டன் பிரிவின் காலிறுக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் பி.வி. சிந்து தோல்வியடைந்தார்.

இன்று நடைபெற உள்ள ஆடவர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் லக்ஷயா சென் - தைவானின் **Tien Chen Chou**-ஐ எதிர்கொள்கிறார்.

ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

கொழும்புவில் நடைபெற உள்ள இப்போட்டி பிற்பகல் மணி 2.30க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் இன்று நடைபெற உள்ள இரண்டாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் திண்டுக்கல் அணி – திருப்பூர் அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

போர்ச்சுகலில் நடைபெற்று வரும் சர்வதேச டெனிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - இங்கிலாந்தின் **Joshu Paris** இணையும், இந்தியாவின் அர்ஜுன் கதே – பிரான்சின் **Arthur Reymond** இணையும் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளன.

**<<<<>>>>**